# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் – 24

# பாவத்தைப் போக்கும் ஏழு படிகள்




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# பாவத்தைப் போக்கும் ஏழு படிகள்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே

பழைய ஏற்பாட்டிலிருந்து **2இராஜா 5:1-14** வரையுள்ள வசனத்தில் அடங்கியுள்ள பகுதிகளிலுள்ள ஆவிக்குரியஅர்த்தத்தை நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

'சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக்கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரயேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன்நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். அப்பொழுது அவன்போய், இஸ்ரயேல் தேசத்துப் பெண் இன்ன இன்னபிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான். அப்பொழுது சீரியாவின் ராஜா நல்லது போகலாம் இஸ்ரயேலின் ராஜாவுக்கு நிருபம்தருகிறேன் என்றான். அப்படியே அவன் தன்கையிலே பத்துத்தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோய், இஸ்ரயேலின் ராஜாவிடத்தில்அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே - இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான், நீர் அவன்குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உன்னிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்றுஎழுதியிருந்தது.இஸ்ரயேலின் ராஜா அந்த நிருபத்தைவாசித்தபோது,அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிட வேண்டும்என்று அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும், உயிர்ப்பிக்கவும்நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப்

பாருங்கள் என்றான். இஸ்ரயேலின் ராஜா தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன் - நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரயேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான். அப்பொழுது எலிசா- அவனிடத்தில் ஆள்அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம்ஸ்நானம் பண்ணு, அப்பொழுது உன் மாம்சம் மாறி,நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங் கோபங்கொண்டு புறப்பட்டுப்போய், அவன் வெளியே வந்து நின்று, தன்தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன்கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரயேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிரத்தோடே திரும்பிப் போனான். அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி - தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உனக்குச் சொல்லியிருந்தால் அதைநீர் செய்வீர் அல்லவா?ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது,அதைச் செய்யவேண்டியது எத்தனைஅதிகம் என்று சொன்னான். அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம்முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போலமாறி அவன் சுத்தமானான்"

சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் ஒரு பெரிய மனிதனும், மகா பராக்கிரமசாலியும் ஆனவன். ஆனால் இவன் ஒரு குஷ்டரோகியாக இருந்தான்.அக்காலத்தில் அது ஒரு அவலத்திற்குரிய நோயாக கருதப்பட்டது. அதாவது, இன்றையநாளில் உள்ள கேன்சர், எயிட்ஸ் போன்ற நோய்களுக்கு சமமாக கருதப்பட்டது. அதிலிருந்து குணப்படுவதற்கு மருத்துவம் இல்லாததால் குஷ்டரோகிகள் மரணமடைய தீர்மானிக்கப்பட்டவர்களாக, சமுதாயத்திலிருந்து பிரிக்கப்பட்டு, நகரத்திற்கு வெளியே குஷ்டரோகிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தார்கள். நாகமானைக் குறித்து மேலும் வாசிப்போம் -




அதோடு கர்த்தர் இவனைக்கொண்டு சீரியாவுக்கு இரட்சிப்பை

கட்டளையிட்டார்(வசனம்1)

**2இராஜாக்கள்5: 2,3**

‘சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக்கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரயேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள். அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன்நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.”

சீரியபடைகள் இஸ்ரயேலில் இருந்து ஒரு சிறுபெண்ணை சிறைப்பிடித்து வந்தனர். அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்துவந்தாள். அப்போது இந்த சிறு பெண் தன் எஜமானுக்கு இருக்கும் வியாதியைக் குறித்து அவன் மனைவியிடம், இஸ்ரயேலில் உள்ளசமாரியாவுக்கு போனால் அங்கு தீர்க்கதரிசி ஒருவர் அவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றுசொல்கிறாள்.

**2இராஜாக்கள்5:4,5**

‘அப்பொழுது அவன்போய், இஸ்ரயேல் தேசத்துப் பெண் இன்ன இன்னபிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான். அப்பொழுது சீரியாவின் ராஜா நல்லது போகலாம் இஸ்ரயேலின் ராஜாவுக்கு நிருபம்தருகிறேன் என்றான். அப்படியே அவன் தன்கையிலே பத்துத்தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோய்..”




இதைக்கேட்ட நாகமானின் மனைவி நாகமானுக்கு சொல்கிறாள். உடனே நாகமான் ராஜாவிடம் சொல்லி உத்தரவு கேட்கும்போது, அவன் அனுமதி கொடுத்து, உடனே இஸ்ரயேல் ராஜாவுக்கு ஒருகடிதமும், தீர்க்கதரிசிக்கு தருவதற்கு பத்துதாலந்து வெள்ளியும், 6000 சேக்கல் நிறைபொன்னையும், மேலும் 10 மாற்று வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு புறப்படுகிறான் நாகமான்.

**2இராஜாக்கள்5:6,7,8,9**

இஸ்ரயேலின் ராஜாவிடத்தில்அந்த நிருபத்தைக் கொடுத்தான்.அதிலே - இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகியநாகமான் கொண்டுவருவான், நீர் அவன்குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உன்னிடத்தில் அனுப்பியிருக்கிறேன்

என்று எழுதியிருந்தது.இஸ்ரயேலின் ராஜா அந்த நிருபத்தைவாசித்தபோது,அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்றுநீக்கிவிட வேண்டும்என்று அவன்என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும், உயிர்ப்பிக்கவும்நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்றான். இஸ்ரயேலின் ராஜா தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன் - நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரயேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்"

நாகமான் இஸ்ரயேல் ராஜாவிடம் சீரிய ராஜா கொடுத்த கடிதத்தை கொடுத்தான். அக்கடிதத்தில் நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிடஉன்னிடம் அனுப்பியிருக்கிறேன் என எழுதியிருந்தது. இதை இஸ்ரயேல் ராஜா படித்த மாத்திரத்தில் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, ஒரு மனுஷனின் குஷ்டரோகத்தை நீக்கவும், அவனைக் கொல்லவும், உயிர்ப்பிக்கவும் நான் தேவனோ? இந்த சீரிய ராஜா என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்றான். உடனே இந்தச் செய்தி தேவனுடைய மனுஷனாகிய தீர்க்கதரிசி எலிசாவுக்குப் போனது. எலிசா ராஜாவுக்கு ஆள் அனுப்பி, நீர் ஏன் வஸ்திரங்களை கிழித்துக் கொள்ளவேண்டும்? நாகமான் என்னிடம் வந்து இஸ்ரயேலில் தீர்க்கதரிசி உண்டு என்பதை அறிந்து கொள்ளட்டும் என்றார். அந்தப்படியே நாகமான் படைகளோடு எலிசாவின் வீட்டு வாசலில் வந்து நின்றான். நாகமான் இஸ்ரயேலின் ராஜாவை சந்தித்ததும் ..அவன் கொண்டுவந்த நிருபத்தில் எழுதப்பட்டிருந்த காரியங்களும் காட்டுத் தீபோல பரவியது. அந்த செய்தி தேவ மனுஷனாகிய எலிசாவின் காதிற்கு எட்டியது. அவர் இராஜாவிடத்தில், நாகமானை தன்னிடத்தில் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்.



**2இராஜாக்கள் 5:10,11,12**

'அப்பொழுது எலிசா- அவனிடத்தில் ஆள்அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம்ஸ்நானம் பண்ணு, அப்பொழுது உன் மாம்சம் மாறி,நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங் கோபங்கொண்டு புறப்பட்டுப்போய், அவன் வெளியே வந்து நின்று, தன்தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம்பண்ணிச்

சுத்தமாகிறதற்கு இஸ்ரயேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிரத்தோடே திரும்பிப்போனான் ”



அங்கு நாகமான் எலிசாவைப் பார்க்க கால் கடுக்க நெடுநேரம் காத்திருந்தபிறகு, எலிசாவிடமிருந்து செய்தி வந்தது.’ எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீபோய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு. அப்பொழுது உம் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். இதைக்கேட்டு நாகமான் கடும் கோபமடைந்தான். காரணம் என்னவெனில், எலிசா வெளியே வந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, தன் கையினால் என்னைத்தொட்டுத் தடவி, என் குஷ்டரோகத்தை நீக்குவான் என்று நாகமான் காத்திருந்தான். அதோடுகூட, சீரிய தேசத்தில் ஆப்னா மற்றும் பர்பார் என்ற இரு நதிகள் யோர்தானைக்காட்டிலும் தெளிந்த நீருடன் அழகாக காட்சியளிக்கும். அப்படியிருக்க தெளிந்த நீருடைய சீரிய தேசத்து நதிகளை குறிப்பிடாமல்,யோர்தானை குறிப்பிட்டது ஏன்? இவ்வாறு பலகேள்விகள் உள்ளத்தில் எழுந்ததால் கோபமுற்று அவன் சீரியாவை நோக்கி பயணத்தைத் துவக்கினான்.

**2இராஜாக்கள் 5:13,14**

‘அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி - தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உனக்குச் சொல்லியிருந்தால் அதைநீர் செய்வீர் அல்லவா?ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடேசொல்லும்போது,அதைச் செய்யவேண்டியது எத்தனைஅதிகம் என்று சொன்னான். அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம்முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போலமாறி அவன் சுத்தமானான்”

இங்கு நாகமான் கோபங்கொண்டு திரும்பிப்போகும்போது அவனுடைய வேலைக்காரன் அவ்விடம் வந்து அவனை தகப்பனே என்று அழைத்து, அந்த தீர்க்கதரிசி உமக்கு ஒரு பெரிய காரியத்தை செய்ய சொல்லியிருந்தால், நீர் செய்தும் முடித்தும் இருப்பீர் அல்லவா? அவர் ஸ்நானம் பண்ணு சுத்தமாவீர்என்றுதானே சொன்னார். இது எவ்வளவு சுலபமான காரியம் என்று சொல்லி சமாதானப்படுத்தினான். அப்போது நாகமான் தேவ மனுஷனாகிய எலிசாவின் வார்த்தையின்படி யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது அவன் மாமிசம் ஒருசிறு பிள்ளையின் மாமிசத்தைப் போல மாறி சுத்தமானான். உண்மையாகவே இதுஒரு ஆச்சரியமான அற்புதம். இங்கு நாகமான் ஏழுமுறை முழுகி எழுந்ததில் அடைந்த அனுபவத்தை கவனித்தோமானால், தன் ஊழியக்காரர் நிர்பந்தித்ததால் கோபத்தோடு யோர்தான் நதிக்குள் இறங்கினர். ஒவ்வொருமுழுக்குக்கு பிறகும், தன் சரீரத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்திருக்கவேண்டும். இப்படி 6முறை ஏமாற்றமடைந்தபிறகு, ஏழாவது

முறை முழுகி எழுந்தபோதுதான் ஒருநொடிப்பொழுதில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. இது நாகமானுக்குள் பெரியமாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த ஏழு முழுக்கு எவ்விதத்தில் நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? சிலர் இந்த சம்பவத்தை வெறும் கற்பனையாக நினைக்கின்றனர். ஆனால் இயேசு நாகமானைக் குறித்து குறிப்பிட்டுள்ளதை பார்க்கலாம் -

**லூக்கா 4:27**

'அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரயேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"

இஸ்ரயேலர்களுக்குள்ளேஅநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானே அல்லாமல் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை. ஏன்? ஏனெனில் அவனுடைய விசுவாசத்தினாலேயே.

ஆகவே, இதில் நமக்கு என்னஆவிக்குரிய அர்த்தம் உள்ளது என்பதை அறியும் முன் வேத வசனத்தில் குஷ்டரோகம் எப்படி அடையாளம் காட்டப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.



**1. அவலட்சணம்** - சரீர அமைப்பு ஒழுங்கில்லாமல் இருப்பது

**2. அழிவு** - மனித உடலின் முக்கியஉறுப்புக்களை சீரழிக்கிறது

**3. உணர்வின்மை** -காலப்போக்கில் சரீரத்தின் அவயவங்கள்உணர்வுகள்இழத்தல்

(உதாரணம்) கண் பார்வை மங்குதல்,செவிடு, இவற்றால் மற்றவர்களின்துணையோடுஜீவிப்பது. இந்த வியாதி மிகவும் கொடுமையானது.

இப்படியிருக்க, இந்த குஷ்டரோகம் எதற்கு அடையாளமாக உள்ளது?
இது பாவத்திற்கு அடையாளம். இந்த பாவத்தின் நிமித்தம் தேவ சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனது சரீர அமைப்பை உருக்குலையச் செய்கிறது -ஆதி1:26

இந்த பாவம் மனிதனில் பரவி உருமாற்றம் செய்வதுமல்லாமல் அவனை அழிவுக்குள்அழைத்துச் செல்கிறது. எப்படியெனில் உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, அவனது நல்லொழுக்கநெறிகளையும்,மனஉணர்வுகளையும் சீர்குலைக்கிறது

இந்த பாவத்தின் பாதிப்பு மனிதனை 100 ஆண்டுகளுக்குமேல் ஆளுகை செய்யும்போது மனிதன் அவனுடைய உணர்வுகளை இழக்கிறான். அதோடு குற்றஉணர்வு என்ன என்பதை அறியாமல் போகிறான். அதன் ஆதிக்கத்தால் ஆட்கொள்ளப்பட்டு, மனிதனை

குருட்டாட்டத்தில் கொண்டுபோவதால், குருடாக்கப்படுகிறான். இவ்வுலகத்தின் தேவனாகிய சாத்தான் - **2கொரிந்தியர் 4:4.**

ஏனென்றால் தேவனுடைய பரிசுத்தஆவி இல்லாமையால் குருடாக்கப்படுகிறார்கள்.

நாகமானின் குஷ்டரோகம் நீங்க 7 தரம் மூழ்கினான், சுகம்பெற்றான்.அதுபோல, இந்த பாவத்தின் பிடியிலிருந்து விடுதலைபெற நாம் செய்யவேண்டிய ஏழு காரியம் (அல்லது)நாம் கடக்கவேண்டிய ஏழு படிகள்உள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்த சில காலங்கள் ஆகும். இந்த 7 படிகள் 1000 வருட அரசாட்சியிலும் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும். அங்கு பொதுவான இரட்சிப்பை பெறவிருக்கும் முழு மனுக்குலத்திற்கும் இந்த ஏழு படி வழிமுறை அவசியமானது **(யூதா 3)**.

**ஏசாயா 35:8-10** மற்றும் **65:20**ல் பாவத்தின் கொடுமையான வல்லமையிலிருந்து உலக ஜனங்கள் பெரும்பாதையான பரிசுத்தவழியில் நடந்து விடுதலைபெறுவர். ஏனென்றால் எல்லாரும் பிறக்கும்போதே துர்க்குணத்தில் உருவாகி பாவத்தில் பிறந்ததினால் விடுதலை கிடைக்கும் **(சங்கீதம்51:5).** இந்த நாகமானின் விஷயங்களிலிருந்து சபை கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன?

**ரோமர் 15: 4**

'தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது"


நிச்சயமாகவே சுவிசேஷயுக சபையாகியநாம் முன்பு பழையஏற்பாட்டில் எழுதப்பட்டவைகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அநேகம் உள்ளன.

சபையானது கடக்கவேண்டியஏழு படிகள்குறித்து தியானிப்போம்

## 1. முதல் முழுக்கு (1வது படி)



விசுவாசம் - பிதாவாகியதேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை மீட்கும் பொருளாகக் கொடுத்த பலியின்மேல் உள்ள விசுவாசம் **(1தீமோத்தேயு 2:5,6)**. விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்- **எபிரேயர் 11:6**



இந்த விசுவாசம் இயேசுகிறிஸ்து உலக இரட்சகர் என்று நம்புவதினால் தொடங்கி, நீதிமானாக்கப்பட்டு, தொடர்ந்து அவரை தங்களின்சொந்த இரட்சகராக்கிக்கொண்டு, பிதாவாகிய தேவனிடம் இவர் மூலம் சகல விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கவேண்டும்

**யோவான் 14:6, யோவான் 10:9**


'நானே வழியும்சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"

..நானே வாசல்..”

முதல் முழுக்குமுடிந்த பின்னும்கூட நம்மில் பாவம் இருக்கிறது. இந்த முதல்படி நம்மை பூரணப்பட அதாவது சுகம்அடைய சரியாக வழிநடத்துகிறது. இப்பொழுது இரண்டாவது முழுக்கு பற்றி பார்ப்போம்.

## 2. இரண்டாவது முழுக்கு(2வது படி)





இந்த இரண்டாவது படி, முதல்படியிலிருந்து நம்மைசற்று வளரச்செய்து,அதன்மூலம் 2வது படியில் வேதம் கற்க விருப்பமும்,சத்தியத்தின்மேல்தாகமுள்ளவர்களாக மாற்றும்.எப்படியெனில்,

**1பேதுரு 2: 3**

‘நீங்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய கலங்கமில்லாத ஞானப்பாலின்மேல்வாஞ்சையாயிருங்கள்”

புதிதாய்ப் பிறந்த குழந்தை என்றால், கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் (புதிய விசுவாசிகள்) இவர்களுடைய விசுவாச வைராக்கியம் எப்படி இருக்குமெனில், எப்போதும் வேதத்தைப் படிப்பதில் ஆர்வமாக இருப்பார்கள். அதாவது, குழந்தைகள் தன் தாயினிடத்தில் பால் குடிக்க விரும்புவதைப்போல் இவர்களும் இருப்பார்கள்


**எபேசியர் 5:26**

‘தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டுதண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்..”

திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் தங்களை சுத்திகரித்து பரிசுத்தமாக்கிக் கொள்வார்கள். எப்படியெனில், தங்களின்ஆரம்பகால கிறிஸ்தவ வாழ்க்கையில் தங்களின் பாவகிரியைகளில் இருந்து மனந்திரும்புதல் துவங்குகிறது. தங்கள்நடத்தையிலும் மாறுதல்ஆரம்பமாக இந்த 2வது முழுக்கு நம்மை 3வதுபடிக்கு வழிநடத்துகிறது.

## 3.மூன்றாவது முழுக்கு(3வதுபடி)





இப்படி சுத்திகரித்து பரிசுத்தமாக்குதலை ஆரம்பம்செய்த இவர்கள் மேன்மேலும் வேதம் படிப்பதிலும் ஆராய்வதிலும் வளர்வதினால் இன்னும் கொஞ்சம் உற்சாகத்தினால் கிறிஸ்துவின் சாயலில் மாற விரும்பி, தங்களின் தேவையற்ற துன்மார்க்க வழிகளை எடுத்துப்போடுகிறார்கள்.

இது பரிசுத்தஆவியின்கிரியையாகஇருக்கிறது. தேவனுடைய பரிசுத்தஆவியினால் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் **(யோவான் 16: 8)**

இவர்கள்தேவனுடைய ஆவிக்கு கீழ்ப்படிந்து தங்களிடமுள்ள தீயசெயல்களை விட்டுவிடுகிறார்கள். இதனால் இவர்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக நிற்கிறார்கள்.


இந்த கட்டத்தில், ஒருவிசுவாசி பின்வருமாறு **சாட்சியமளிப்பார்** :

- நான் புகைபிடிப்பவனாக இருந்து, அதுஒருவருக்கும் தெரியாது என நினைத்திருந்தேன் ஆனால் வேதத்தை வாசிக்கத் தொடங்கினபோதுதான், தேவன் அதை அறிந்திருக்கிறார் என்றுணர்ந்து, அப்பழக்கத்தை விட்டுவிட தீர்மானித்தேன்.
- வேறொருவரோ, நான்சினிமா பைத்தியமாக இருந்தேன். ஆனால் இப்பொழுதோ அந்த உணர்வுகள்இல்லாதிருக்கிறேன்
- நான் அன்றாடம் குடிப்பவனாக இருந்தேன். நண்பர்களோடு குடித்துவிட்டு வீட்டிற்கு தாமதமாக செல்வேன்.ஆனால் இப்பொழுதோ அதை செய்யாதவாறு எச்சரிக்கையாயிருக்கிறேன்

இது இவர்களை பிதாவாகிய தேவனிடம் நீதிக்குட்பட்ட முழுமையடையாத அர்ப்பணிப்பு செய்ய தகுதிப்படுத்துகிறது .இந்த முழுக்கு இவர்களை அடுத்த முழுக்குக்கு தயார்ப்படுத்துகிறது.

## 4. நான்காவது முழுக்கு(4வதுபடி)





இது பிதாவாகிய தேவனிடம் உடன்படிக்கை செய்வதற்கு அடையாளம். உடன்படிக்கை என்பது தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவ சித்தத்தை செய்கிறவர்களாக, அதாவது இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறேன் என்பதைக் குறிக்கும். தேவ வார்த்தையை ஆழமாய் தியானித்து, விசுவாசியாக மட்டுமே கிறிஸ்துவுக்குள் இருந்தவர், கிறிஸ்தவருக்கான அழைப்பை ஆழமாக உணர்வதைக் குறிக்கும்.

**பிலிப்பியர் 1:29**

‘ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது”

**1பேதுரு 2:21**

‘இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்”

இயேசுவை விசுவாசிப்பது கிறிஸ்தவ வளர்ச்சியின் முதற்படி என்றுணர்ந்தபின், அடுத்த நிலையாகிய இயேசுவை பின்பற்றி நடக்கவேண்டியதன் அவசியத்தை அவரது வார்த்தையினால் உணர்கிறார் -

**லூக்கா9:23**

‘ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையைஅனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்”

ஆம். இந்த உலகத்தின் ஆவியாகிய சுயசித்தமான வாழ்க்கையை வெறுப்பதே ‘தன்னைத்தான்

வெறுப்பது"என்று உணர்கிறார்.இவ்வாறு உணர்ந்த கிறிஸ்தவனின்அனுபவத்தை பவுல் அப்போஸ்தலன் பின்வரும் வசனத்தில் விவரிக்கிறார் -

**ரோமர் 12:2,1**

'நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய
நன்மையும்பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்றுபகுத்தறியத்தக்கதாக,
உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் ..
நீங்கள் உங்கள் சரீரங்களைப்பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக
ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை
வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"

தங்களின் சுயசித்தத்தை வெறுத்து, மாம்ச கிரியைகளை அழித்து, பலியின் வாழ்க்கையில் தங்கள் கனவுகளையும் திறமைகளையும் நோக்கங்களையும் நேரங்களையும், மாம்சபலத்தையும், பண பலத்தையும் தேவனுடைய காரியங்களுக்கு வாழ்நாள் முழுவதும் பயன்படுத்துவார்கள். இப்படி உடன்படிக்கை செய்தவர்களை ..

**சங்கீதம் 50:5**

'பலியினால் என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய
பரிசுத்தவான்களைஎன்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்"

இந்த உடன்படிக்கையை இவர்கள் ஞானஸ்நானம் என்ற திருமுழுக்கினால்அடையாளமாக செய்கிறார்கள். இந்த 4ம் முழுக்கு 5ம் முழுக்குக்கு வழிகாட்டுகிறது.


## 5.ஐந்தாம் முழுக்கு (5ம்படி)



இந்த முழுக்கு நாம் உடன்படிக்கையில் செய்த பொருத்தனைகளை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுவதாகும்.

**சங்கீதம் 116:14**

'நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளைஅவருடைய
ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்"



இது ஒவ்வொரு உடன்படிக்கை செய்த கிறிஸ்தவனும் தங்கள் அனுதினகிறிஸ்தவ வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டியது. இப்படி செய்வதினால் கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி ஆரம்பித்து, கிறிஸ்துவின் சாயலில் நிதானமாக வளரத்தொடங்குகிறார்கள்.

**2கொரிந்தியர் 5:17**

'இப்படியிருக்கஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்.
பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின"

இந்த புதியசிருஷ்டி என்பது பழைய மனுஷன் மற்றும் புதிய மனுஷன் ஆகிய இரண்டையும்

உள்ளடக்கியதாகும். கிறிஸ்துவை பின்பற்றுபவர்களிடத்தில் இந்த இருவித சிந்தைகள் காணப்படும். அதாவது, தான் இயல்பாகவே தரித்திருந்த பூமிக்குரிய சிந்தை மற்றும் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டபோது தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய சிந்தை. இவற்றில் பூமிக்குரிய சிந்தை மரித்ததாகக் கருதப்படுகிறது. அதே சமயம், ஆவிக்குரிய சிந்தையானது உயிரோடு இருந்து, இந்த சிந்தையில் வளர்வதே ஒரு புதிய சிருஷ்டியின் பிரதான நோக்கமாக உள்ளது.

இவ்வாறு உறுதியான விசுவாசத்தால் உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்றும்போது, சோதனைகளை எதிர்கொள்ள நேரிடும். இது நிச்சயம் வரவேண்டியதே.

**1பேதுரு4:12**


'பிரியமானவர்களே உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் .."

இந்த சோதனைநம் விசுவாசத்திற்குவரும் சோதனையாகும்.


**1பேதுரு 1:7**

'அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்"

ஆக இந்த ஐந்தாவது முழுக்கு அடுத்தமுழுக்குக்கு நம்மை தயார்ப்படுத்துகிறது.




## 6.ஆறாவது முழுக்கு(6வதுபடி)



இது நம்மை அன்பின் கனியை கொடுப்பதை சுட்டிக்காட்டுகிறது.அதாவது நாம் கனிதரும் கிறிஸ்தவ ஜீவியம் வாழ்வதைக் குறிக்கிறது. இதை பூரண அன்போடுகொடுக்கவேண்டும்.
இவ்வன்பு சற்றும் குறைவில்லாதது. இதை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம்தான்.ஆனால் முயற்சி செய்தால் முடியும்.


**கலாத்தியர் 5:22,23**



'ஆவியின் கனியோ அன்பு. சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் "

என்று பார்க்கிறோம். இந்த பலன்கள்உடனே வந்துவிடாது. நிதானமாகத் தான்வளரும். எப்படியெனில் முதலில்

- ⇨ **விதை போடப்படும் - விதை தேவனுடைய வசனம்.**
- ⇨ **பிறகு வேர்மண்ணில் விடும் - இது நம்மில் ஆழப் பதியும் விசுவாசம்.**
- ⇨ **அடுத்து முளைவிட்டு மண்ணில் மேல்நோக்கி வளரவேண்டும் - இவை நம்மில் கிறிஸ்தவ குணங்கள் வெளிப்படுதல்.**




- **பிறகு இலைகள் விட்டு வளருதல் - இது நாம் கர்த்தருக்கென்று செய்கிற ஊழியங்கள்**
- **மேலும் பூ விடவேண்டும் - இவை நம் கிறிஸ்தவ வாழ்வின் அனுபவங்கள்.பிறகு காய்கனியாகிபலன் தருகிறது.**

இந்த அன்பின் கனி மற்றும் அதன் வெளிப்பாடுகளின் செயல்முறை கீழேவிளக்கப்பட்டிருக்கிறது -

- **விசுவாசம்** - இது அவநம்பிக்கைக்கு விரோதமாகபோராடும்
- **இச்சையடக்கம்** -இவை அன்பினால்பயிற்றுவிக்கப்படுகிறது
- **தயவு** - இவைஅன்பினால் நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது
- **சந்தோஷம்** - அன்பினால் உயர்வாக எண்ணி மகிழ்ந்திருத்தல்
- **சமாதானம்** - அன்பினால் அமைதி காத்தல்(இளைப்பாறுதல்)
- **சாந்தம்** - நாம் அன்பினால் சமுதாயத்தை நேசித்தல்
- **தாழ்மை** - அன்பினால் மற்றவர்களின் வார்த்தைக்கு செவிசாய்ப்பது
- **நீடியபொறுமை** - துன்பத்தில் நாசமோசத்தில், முடிவுபரியந்தம் அன்பினால்தாங்குதல்
- **நற்குணம்** - அன்பினை கிரியையில் காண்பித்தல்

அன்பினால் நிறைந்த உள்ளத்திலிருந்தே இப்படிப்பட்ட குணம் உருவாகும். இப்படிப்பட்ட கிறிஸ்தவன் தற்போது குமாரனுடைய சாயலுக்கு முன்னேறுகிறார்.

## 7.ஏழாவது முழுக்கு (7வதுபடி)



இவை யோர்தானில்ஆறுமுறை மூழ்கிமேலே வரும்போதே பூரணஅன்பிற்குரிய அடையாளத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த ஏழாவது முழுக்கு எதைக் காட்டுகிறது என்றால், இந்த பூரணஅன்பில் தொடர்ந்து நிலைநின்று மரணபரியந்தம் உண்மையாக இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இதைத்தான் அப்.பவுல்,

**எபேசியர் 6:13**

'நீங்கள் தீமைகளை எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு..."

இது முந்தைய 6முழுக்குகள் அல்லது 6படிகள் மூலம் உருவான பூரணஅன்பின் அடையாளத்தைக் குறிக்கும். இந்த இறுதியான சோதனைபற்றி வாசிப்போம் -

**மத்தேயு 24:13**

‘முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்”

**வெளிப்படுத்தல் 2:10**

‘நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.அப்பொழுதுஜீவகிரீடத்தைஉனக்குத்தருவேன்”

இந்த மாபெரும் வாக்குத்தத்தங்கள் மரணபரியந்தம் நிலைநிற்கவே நமக்கு அருளப்பட்டிருக்கிறது. பொறுமைக்கான இந்த பரீட்சைகள் இறுதித்தேர்வுபோல இருந்து, கிறிஸ்தவ வளர்ச்சியை பரிசோதிக்கிறது.

**யாக்கோபு1:4**

‘நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாக இராமல்,பூரணராயும்,
நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படிக்கு பொறுமையானது பூரண கிரியை
செய்யக்கடவது”

தேவ ஞானம் பொறுமையினால் பூரணமுடிவினை எட்டுகிறது. இறுதியாக யோர்தானில ஏழாவது முழுக்கிலிருந்து எழுந்து சுகம்பெற்று வெளியே வருவது முதலாம் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம்

**சங்கீதம் 17:15**

‘நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன்.
நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்”

இவர்கள் திவ்வியசுபாவத்தில் பங்குபெறுவார்கள். உமது சாயலால் திருப்தியாவேன் என்ற வார்த்தையின் பொருள் என்ன?

1.பெலவீனமான, அதேசமயம் ஆபத்திலான இந்த மாம்சத்தைவிட்டு விடுதலை பெறுவதால் திருப்தியடைதல்

2. கிறிஸ்துவை பின்பற்றிநடந்து,பலிகள் உபத்திரவங்கள்மூலம், தான் எதிர்பார்த்ததற்கும்மேலாக பெறுகின்ற பலன்மூலம் திருப்தியடைதல்

## ‘‘சிறு பெண்” - சிறு மந்தை வகுப்பாருக்கு அடையாளம்

நாகமானின் வீட்டில் அடிமையாக வேலை பார்த்த இவள், உலகத்தின் பார்வைக்கு படிப்பறிவில்லாதவளாக, செல்வாக்கு இல்லாதவளாக இருக்கலாம். ஆனால் இவள் மெய் தேவனிடத்திலும், அவரது தீர்க்கதரிசியிடத்திலும் கொண்ட ஆழ்ந்த விசுவாசத்தினால்தான் தக்க சமயத்தில் தக்க ஆலோசனை கொடுக்கமுடிந்தது. இதனால் நாகமானுக்கு குஷ்டரோகம் குணமானது. இவ்வாறே சிறுமந்தை வகுப்பாரும் இவ்வுலகில் அற்பமாகவும், துடைத்தெறியப்பட்ட கந்தையைப்போலவும் காணப்படுவர் என்பதை கீழ்க்காணும் வசனங்கள் உறுதிப்படுத்துகிறது -

**1கொரிந்தியர் 1:27**

‘ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத்

தெரிந்துகொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார்"

**1கொரிந்தியர் 4:13**

'தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம். இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்

அடுத்து, இந்த ஏழு முழுக்குகளும்யோர்தான் நதியில் சம்பவிப்பது எதைக்குறிக்கிறது?

இந்த யோர்தான் விழுந்துபோன பாவமனிதனின் நிலைமையை படம்பிடித்துக் காட்டுகிறது. சுவிசேஷயுகத்தில் ஒரு கிறிஸ்தவனுக்குரிய 7 முழுக்குகள்அல்லது 7 படிகளானது விழுந்துபோன நிலையிலிருக்கிற ஒருவரை சுற்றியுள்ள நிலைமையையே யோர்தான்நதி குறிக்கிறது.


இந்த மரணத்திலிருந்து எழுவது இன்னொரு விதமாக படம்பிடித்துக் காட்டுகிறது. அவை ஆயிர வருட அரசாட்சியில் உலக மனுக்குலம் தங்கள் இரட்சிப்பை இதுபோன்ற 7 படிகளில்வழிநடத்தப்பட்டு பெற்றுக்கொள்வதை வாசிக்கலாம் -

**2இராஜாக்கள்4:32-35**

'எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள்இருவருக்கும் பின்னாக கதவைப்பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து கிட்டேபோய், தன்வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக் கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும்உலாவி,திரும்பக் கிட்டப்போய் அவன்மேல் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மி தன் கண்களைத் திறந்தான்"

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **பிள்ளை**- மரணத்திலிருந்து ஜீவன்பெற்ற உலக மனுக்குலத்தை குறிக்கிறான்.ஆனால் இது 7முறை தும்மின பிறகே நிறைவேறும்.

**தேவனுடையகிருபை நம் அனைவரோடும்கூட இருப்பதாக. ஆமென்**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/